**இலங்கை மருத்துவ பேரவைம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மருத்துவ பேரவையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் என்பவற்றுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிரயாத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, போரவையின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரவையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,
- பேரவை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீது கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| பொருத்தமான நியமத்துடன் தொடர்புடைய இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் 01 வருட கால முதிர்ச்சியைக் கொண்ட நிலையான வைப்புக்கள் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும், மொத்தமாக ஐ.அ.டொ. 23,500 (ரூபா 7,612,198) பெறுமதியுடைய ஒரு வருட கால முதிர்ச்சியைக் கொண்ட நிலையான வைப்புக்களும், ரூபா 268,474,357 பெறுமதியான திறைசேரி உண்டியல்களின் கிரயங்களும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | உடன்படுவதுடன் 2024 ஆம் ஆண்டில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பவற்றுடன் தொடர்புடைய காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் என்பன தனித்தனியாக சுட்டிக்காட்டப்பட வேண்டும். எனினும், ரூபா 120,553,831 மற்றும் ரூபா 67,267,881 பெறுமதியான முறையே நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பவைகளில் காணப்படுகின்ற தேறிய மாற்றங்கள் காசு வெளிப்பாய்ச்சல்களாக சீராக்கப்பட்டுள்ளது. | உடன்படுவதுடன் முதலீடுகளின் கொள்வனவையும் அகற்றலினையும் தனித்தனியாக காட்டுவதற்கு 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 73 (அ) ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மொத்தமாக கொண்டு செல்லும் தொகையினை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அடிப்படைகள் வெளிப்படுத்தப்பட வேண்மாயினும் மருத்துவ பேரவையினால் அவ்வாறு வெளிப்படுத்தப்படவில்லை. | உடன்படுகிறது | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும், அவ்வாறு செய்வதற்கு தவறியமையினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக தற்போதும் பயன்பாட்டில் உள்ள சொத்துக்கள் கிரயத்தின் தேறிய புத்தக பெறுமதியான ரூபா 20,277,964 பூச்சியமாகியது . | உடன்படுகிறது. | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். . |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் கடப்பாடாடக இனங்காணப்பட்ட ஊழியர் நலன்கள் நடைமுறை பெறுமதியில் காட்டப்பட வேண்டுமாயினும் இது அவ்வாறு செய்யப்படவில்லை. | உடன்படுவதுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய நேரத்தில் பணிக்கொடைக்காக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஒக்டோபர் 03 இல் உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து மருத்துவ பேரவையின் அங்கீகரித்தல் பிரிவினால் நன்கொடையாக பெறப்பட்ட ரூபா 1,720,000 பெறுமதியான தொஷிபா கலர் எம்எவ்பி ஈ-ஸ்டுடியோ 2510 குளிரூட்டி மற்றும் ஒவ்வொன்றும் ரூபா 1,025,000 கிரயமுடைய ரூபா 2,745,000 பெறுமதியான 65 ஸ்மார்ட் பலகைகள் என்பவைகளின் சொத்துக்கள் நிதக்கூற்றுக்களில் காட்டப்படவோ அதேபோன்று அவைகளின் பெறுமதி நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் உள்ளடக்கப்படவோ இல்லை. | உடன்படுவதுடன் உங்களுடைய அவதானிப்பின் பிரகாரம் நன்கொடைகள் கணக்கிற்கு கொண்டு வரப்படும். | இந்த குறைபாடு தொடர்பாக சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் 6 (2) (அ) ஆம் பிரிவு | பணியாளரால் இறுதியாக எடுக்கப்பட்ட சம்பளம் அல்லது கணக்கிடப்பட்ட கூலி வீதத்தில் பூர்த்தி செய்யப்பட்ட சேவையின் ஒவ்வொரு ஆண்டிற்கான மாத கூலி அல்லது சம்பளத்தின் அரைவாசிக்கு சமனான தொகை பணிக்கொடையாக பெறுவதற்கு ஒரு பணியாளருக்கு உரித்துள்ளது. இருப்பினும், ஒவ்வொரு ஆண்டின் ஒரு மாதத்திற்கு சமமான பணிக்கொடை செலுத்தப்பட வேண்டும் என்றும் மாதாந்த சம்பளத்தை கணக்கிடுவதில் பேரவைக் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும் 2007 நவம்பர் 15 ஆம் திகதியில் இலங்கை மருத்துவ பேரவை சபையின் முகாமைத்துவ குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. | உடன்படுவதுடன் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப பணிக்கொடை கணக்கிடப்பட்டுள்ளது. உங்களுடைய அவதானிப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் அதிகாரச்சட்டத்தின் 23 (1) (அ) ஆம் பிரிவு | பேரைவக்கான ஒரு தகவல் உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | வேறுவிதமாக குறிப்பிடப்படாதுவிடின் சகல வேலை நாட்களிலும் அரச உத்தியோகத்தர்களுக்கான சாதாரன வேலை மணித்தியாலங்கள் மு.ப 8.30 தொடக்கம் பி.ப 4.15 வரையாக இருக்க வேண்டுமாயினும் பேரவையின் உத்தியோகத்தர்களுக்கான சாதாரன மணித்தியாலம் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.15 வரையாக இருந்தன. | பதிலளிக்கப்படவில்லை | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 135 | பொதுவாகவோ அல்லது தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் அடிப்படையிலோ கணக்கீட்டு உத்தியோகத்தர் அவருடைய செயற்பாடுகளை பகிர்ந்தளிக்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் நிதிப்பிரமாணம் 135 (4) பின்பற்றப்பட வேண்டும். இருப்பினும், ஏற்படுகின்ற செலவினங்கள் தொடர்பாக பேரவையானது நிதி அதிகாரத்தினை பகிர்தளிக்கவில்லை. | உடன்படுவதுடன் 2023 இன் பிற்பகுதியில் இலங்கை மருத்துவ பேரவை அரச நிறுவனமொன்றாக செயற்படுவதற்கு தீர்மானித்தது. எனவே நிதி பிரமாணங்களினை முழுமையாக பின்பற்றுவதற்கு சலுகைக் காலமொன்று தேவைப்படுகிறது. நிதி அதிகாரத்தின் பகிர்ந்தளிப்பு தொடர்பாக தேவையான நடிவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 257 | சகல உறுதிப்பத்திரங்களும் அவைகள் கொடுப்பனவிற்காக கொடுப்பனவை செலுத்தும் உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு சான்றுறுதி செய்யப்பட வேண்டும். கொடுப்பனவிற்காக | உடன்படுவதுடன் தற்போது சான்றுறுதி செய்யப்பட்ட உறுதிப்பத்திரங்களுக்காக மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிப்பத்திரத்தை வழங்கும் அல்லது அதற்கான கொடுப்பனவை மேற்கொள்ளும் ஒவ்வொரு உத்தியோகத்தரின் கடமையாக அதனை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் கொடுப்பனவிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்பத்திரம் முறையாக சான்றுறுதி செய்யப்பட்டுள்ளதனை பார்க்க வேண்டியதாக உள்ளது. எனினும், பேரவையின் கொடுப்பனவு உறுதிப்பத்திரங்கள் மீது மாதிரி சோதனையின் பிரகாரம் 22 சந்தர்ப்பங்களில் ரூபா 6,922,850 பெறுமதியான சான்றுறுதிப்படுத்தப்படாத உறுதிப்பத்திரங்கள் சார்பாக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 386 (6) | சகல காசோலைகளும் கட்டளைக்கு செலுத்தக்கூடியதாக தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் குறுக்கிடப்படலும் வேண்டும். திறந்த காசோலையினை வழங்கும் நோக்கத்திற்காக பணியாளர் உத்தியோகத்தரின் குறிப்பிடத்தக்க அதிகாரம் அவசியமாகும். எனினும், பேரவை அந்த பிரமாணத்திற்கு முரணாக 90 சந்தர்ப்பங்களில் ரூபா 14,994,066 பெறுமதியான பணக் காசோலைகளை வழங்கியுள்ளது. | உடன்படுவதுடன் பேரவை தற்போது சில்லரைச்செலவுக் காசினை மீள்நிரப்புவதற்காக மாத்திரம் திறந்த காசோலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக, சில்லரைச்செலவு காசிற்கான பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு காசோலைகளினை வழங்குவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | வருடாந்த பொருட் சுற்றாய்வு நடத்தப்படவில்லை என்பதுடன் பொருட் சுற்றாய்வின் பிரதியொன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவுமில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஊ) 2021 நவம்பர் 16 இல் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தொழிற்பாடுகள் கையேடு

| | | | |
|---|---|---|---|
| (i) 3.1 ஆம் பந்தி | பணியாளர் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டுமாயினும் மருத்துவ பேரவை அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தொழிற்பாடுகள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 3.2 ஆம் பந்தி | பதவியணியின் எண்ணிக்கை, ஆட்சேர்ப்புத் திட்டம், சம்பள அளவுத்திட்டங்கள் மற்றும் கொடுப்பனவுகள் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றிருக்க வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தொழிற்பாடுகள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) 3.3 ஆம் பந்தி | ஒவ்வொரு பிரிவின் பணியாளர் தேவைப்பாடுகள் மற்றும் நிறுவன கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்குவதன் மூலம் மனித வளங்கள் தொடர்பான தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும் மருத்துவ பேரவை அவ்வாறு செய்யவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தொழிற்பாடுகள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) 3.4 ஆம் பந்தி ((i) | தொழில் விவரணம், தொழில்சார்/ கல்வித்தகைமைகள், அனுபவம் மற்றும் வயது ஆகியவற்றை உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் தயாரிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தொழிற்பாடுகள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) 3.6 ஆம் பந்தி | பேரவையானது தந்திரோபாய திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் | பதிலளிக்கப்படவில்லை. | தொழிற்பாடுகள் கையேட்டின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்பவற்றின் அடிப்படையில் விளைதிறனானதொரு செயல்திறன் மதிப்பீட்டு முறைமையினை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டிய அதே வேளை ஒவ்வொரு ஊழியரின் உற்பத்தித்திறனானது உடன் மேலுள்ள உத்தியோகத்தரினால் மதிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், ஒப்பந்தம் அல்லது நிரந்தர அடிப்படையில் பேரவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றங்கள் அவர்களிகளின் செயல்திறனை மதிப்பீடு செய்யாமல் செலுத்தப்பட்டுள்ளது. | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (vi) 6.6 ஆம் பந்தி | நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து 05 மாத காலப்பகுதிக்குள் கணக்காய்வு அறிக்கையுடன் சேர்த்து வருடாந்த நிதிக் கூற்றுக்களை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், 2024 மார்ச் 25 ஆம் திகதி வரை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தொழிற்பாடுகள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2021 நவம்பர் 16 ஆம் ஆண்டின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிகள் | | | |
| | (i) 2.3 ஆம் பந்தி | தந்திரோபாய திட்டம், செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியவை தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சின் செயலாளர் ஊடாக பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதன் மீது நல்லாளுகை சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| | (ii) 7.5 ஆம் பந்தி | நிறுவனமொன்று காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்தம் செயல்நடவடிக்கைகள் அறிக்கைகளை தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் செயல்நடவடிக்கை அறிக்கைகள் பொருத்தமான உரிய அமைச்சுக்கும் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், பேரவையானது செயல்நடவடிக்கை அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2023 திசெம்பர் 11 ஆம் திகதி PED/04/2023 ஆம் ஆண்டின் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2023 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியமாக பேரவையின் ஊழியர்கள் அல்லது உத்தியோகத்தர்களுக்கு ஏப்ரல் மற்றும் திசெம்பரில் சம்பளத்தின் அரைவாசிக்கு அல்லது முழுச்சம்பளத்திற்கு சமமான ரூபா 1,616,661 தொகை நல்லாளுகையின் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. அந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 2018 யூலை 18 ஆம் திகதி 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் II ஆம் பந்தி | சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளினை தீர்மானிப்பதற்கு நல்லாளுகை சபைக்கு அதிகாரமில்லை என்பதுடன் மேலதிகமாக செலுத்தப்படும் சகல கொடுப்பனவுகளும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். இருப்பினும், 2018 பெப்ரவரி 23 மற்றும் 2022 ஏப்ரல் 20 ஆம் திகதியில் நல்லாளுகை சபையினால் | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானமான ரூபா 8,700 மற்றும் ரூபா 10,000 தொகைகளை உள்ளடக்கி சகல ஊழியர்களுக்கும் மாதாந்தம் ரூபா 18,700 கொடுப்பனவொன்று செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. | | |
| (ஒ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் 4.2 ஆம் வழிகாட்டி | ஒரு நிறுவனம் குறைந்தபட்சம் 03 ஆண்டுகளிற்காக திட்டமிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். பேரவையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் திட்டமானது மீளாய்வாண்டினை மாத்திரம் கவனம் செலுத்தியுள்ளது. | உடன்படுவதுடன் உரிய நேரத்தில் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 200,262,651 மிகை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகையாக ரூபா. 280,427,245 காணப்பட்டது. இதனால் நிதி விளைவில் ரூபா 80,164,594 குறைவு அவதானிக்கப்பட்டது. இந்த சரிவிற்கான பிரதான காரணமாக வருமானத்தில் ஏற்பட்ட குறைவாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 70 ஆம் பிரிவின் பிரகாரம் அதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல கட்டணங்களும் காலத்துக்குக் காலம் பிரமாணங்களின் ஊடாக அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். இருப்பினும் 2023 ஆம் ஆண்டளவில் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின் 09 வகைகள் பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளன. ஆனால் அதனுடன் தொடர்புடைய பிரமாணங்கள் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. | உடன்படுவதுடன் பொருத்தமான பிரமாணங்களினை தயாரித்து வர்த்தமானியில் பிரசுரிக்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1927 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களிற்கான பிரமாணங்கள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும் அதன்படி பிரமாணங்கள் தயாரிக்கப்படவில்லை. | பேரவை புதிய பிரமாணங்களினை தயாரிப்பதற்கு அல்லது தற்போதைய பிரமாணங்களினை திருத்துவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| கட்டளைச்சட்டத்துடன் தொடர்பானவை | விடயம் |
|---|---|
| 19 (இ) | மருத்துவ பேரவைக்கு அலுவலர்களை நீக்குதல், இடைநிறுத்தல் மற்றும் நியமனம் செய்தல். |
| 19 (ஈ) | பெறுவனவுகள் மற்றும் செலவுகள் என்பவற்றிற்கான கணக்கீடும் அவ்வகையான கணக்கீடுகள் மீது கணக்காய்வினை நடத்துதல் |
| 19 (உ) | மருத்துவ கல்வியின் ஆகக்குறைந்த நியமங்களினை பேணுதல் உட்பட இந்த கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு ஒரு நபருக்கு உரித்துடைய பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏதாவது தகைமைகளை வழங்கும் ஏனைய நிறுவனங்களின் கற்கைநெறிகள், பரீட்சைகள், பணியாளர், உபகரணம், தங்குமிடம், பயிற்சிகள் மற்றும் ஏனைய வசதிகள் என்பவற்றுடன் தொடர்புடைய நியமங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 19 (ஊ) | பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படும் மருத்துவக் கல்வியில் முதுமாணி பட்டதாரி தகைமைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்களினை பேணுதல் | | |
| (இ) | கட்டளைச்சட்டத்தில் விஷேடமாக குறிப்பிடப்படாத விடயங்களிற்கான கட்டணங்களை மீளப்பெறல் தொடர்பான அறிவுறுத்தல் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படும். இருப்பினும் கட்டளைச்சட்டத்தில் விஷேடமாக குறிப்பிடப்படாத பதிவுசெய்தல் மற்றும் சேவைக்கட்டணங்கள் என்பவற்றின் கீழ் பேரவையினால் விதிப்பனவு செய்யப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக 50 சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | உடன்படுவதுடன் பொருத்தமான பிரமாணங்களினை தயாரித்து பாராளுமன்ற அனுமதி பெறுவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவ பேரவையினால் விதிக்கப்பட்ட சகல கட்டணங்களும் விண்ணப்பங்களுடன் சேர்த்து எமது வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வருமானத்தினை சேகரிப்பதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேரவையில் பதிவுகள் பற்றிய தரவினை உள்ளடக்குகின்ற பதிவேடு துல்லியமாகவும் நாளதுவரையான வகையில் பேணப்பட வேண்டும், எனவும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் பெயர் அவர் இறந்தவுடன் நீக்கப்பட வேண்டும் என்று கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அத்தகைய நபரின் பெயரை பதிவுகளிலில் இருந்து நீக்கிய செயற்பாடு கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. | கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய தகவல் மற்றும் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். அத்தகைய நபரின் பெயரை பதிவுகளிலில் இருந்து நீக்கிய செயற்பாடு கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. | கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறமையான, மனிதாபிமான, நெறிமுறையான மற்றும் பாதுகாப்பான சுகாதார பராமரிப்பு | பதிலளிக்கப்படவில்லை. | ஆளுகைக் குழு கூட்டத்தில் பங்குபற்றுவதனை |

| | | | |
|---|---|---|---|
| | நிபுணத்துவர்களினால் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு பராமரிக்கப்படுவதை நிச்சயிப்பது பேரவையின் தூரநோக்காக இருக்கின்ற அதே வேளை நாடு முழுவதும் சுகாதார பராமரிப்பின் கல்வி மற்றும் நடைமுறையின் நியமங்களினை அமைத்தல், பேணுதல் மற்றும் உயர்த்துதல் போன்றவற்றினால் பொது மக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றினை பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் பேணுதல் இதன் இலட்சிய நோக்காகும். அந்த வகையில், இலங்கை மருத்துவ பேரவையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட 34 உறுப்பினர்களைக் கொண்ட பேரவையின் ஆளுகை குழு 2023 ஆம் ஆண்டில் 13 கூட்டங்களினை நடத்தியிருந்ததுடன் 07 கூட்டங்கள் மாத்திரமே உறுப்பினர்கள் அதில் பங்குபற்றவேண்டிய 80 சதவீதத்திற்கு மேல் பங்குபற்றியுள்ளனர். | | ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சுகாதார சேவை நிபுணர்களினால் பாதுகாப்பானதும் வினைத்திறனுமாக சுகாதார சேவையினை நிச்சயிப்பதற்கு ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் முறைமையினை அபிவிருத்தி செய்தல், சுகாதார சேவையில் தொழில்முறை கல்வியினை அடைந்து கொள்வதற்கான கருவிகளை அபிவிருத்தி செய்தல், வெளிப்படைத்தன்மையுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கற்கைநெறிகளினை அங்கீகரிப்பதன் மூலம் நியமங்களினை உறுதிப்படுத்தல், மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒழுக்கங்களினை பேணுதல் போன்ற பேரவையின் செயற்பாடுகளுக்கு அமைய 2023 ஆம் ஆண்டில் பேரவை 15 உப குழுக்களினை அமுல்படுத்தியது. பேரவையின் 15 உப குழுக்களினால் நடத்தப்பட்ட கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்குபற்றல் ஆகக் குறைவாக 02 உம் ஆகக் கூடியதாக 16 உம் காணப்பட்டது என மாதிரி கணக்காய்வில் தெரியவந்தது. மேலும், அந்த உப குழுக்களில் உறுப்பினர்களின் பங்குபற்றல் திருப்தியாக இருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உப குழுக்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதனை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1927 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மருத்துவ கட்டளைச்சட்டத்தின் பின்வரும் 09 பிரிவுகளின் பிரகாரம் பதவிகள் தொடர்பாக மருத்துவ பேரவையினால் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) 39 பில்லியன் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிபுணத்துவ மருத்துவ பயிற்சியாளர்கள் மற்றும் பல் நிபுணத்துவர்கள் என்பவற்றுக்கான தனியானதொரு தரவுத்தளம் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, அத்தகைய தரவு பிரதான தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | எஸ்எல்எம்சீ (SLMC) தரவத்தளம் புதுப்பித்துக்கொண்டிருப்பதுடன் விரைவில் முன்னேற்றப்படும். | அனைத்து பதிவு தரவுகளும் உள்ளடங்கும் வகையில் தரவுத்தளம் பராமரிக்கப்பட வேண்டும். |
| | (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக பதிவு தரவுத்தளத்தில் உத்தியோகத்தரின் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை உள்ளீடு செய்வதற்கு இயலாமை; ஒரு உத்தியோகத்தரின் பெயரினை மாற்றம் செய்கின்ற சந்தர்ப்பத்தில் புதிய பெயரை சேர்த்து பழைய பெயரை கண்டுபிடிக்க முடியாமை; மருத்துவ பயிற்சியாளர்களின் தனித்துவத்தினை உள்ளடக்குவதற்கு வசதிகளில் குறைபாடு உள்ளமை; மேலதிக தகைமைகள் மற்றும் அத்தகைய தகைமைகளை பெற்றுக்கொண்ட திகதிகள் ஆகியவற்றினை உள்ளடக்குவதற்கான வசதிகள் இல்லாமை; பதிவுகளின் புதுப்பித்தல் திகதிகளை குறிப்பிடப்படாமை; முறைமையில் செயல்முறை வழிப்படுத்தலில் (word processing) தரவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதனால் பல்கலைக்கழகங்கள் அல்லது வெளிநாட்டு மருத்துவ பட்டங்களின் கீழ் களஞ்சியப்படுத்தப்படுகின்ற | - மேற்படி - | சகல முக்கியமான தரவுகளும் உள்ளிடப்பட வேண்டும் என்பதுடன் நாளது வரை வகையில் பராமரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட தகவலை பெற்றுக்கொள்ள இயலாமை, மற்றும் உத்தியோகத்தரின் பதிவு செயலுள்ளதா அல்லது செயலற்றதா என்ற தகவலை பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயற்பாடுகள் கையேட்டின் 6 – 11 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் 3 – 1 பந்தி என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்து பேரவையின் வலைத்தளம் பராமரிக்கப்படவில்லை. | இலங்கை மருத்துவ பேரவை தற்போது மேம்படுத்தப்பட்டதொரு மும்மொழி வலைதளத்தினை அபிவிருத்தி செய்து வருகின்றது. ஸ்ரீலங்கா டெலிகொம் உடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயனருக்கு எளிமையான வலைதளமொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைத்தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூன் 15 தொடக்கம் 2024 யூன் 15 வரையான காலப்பகுதியின் போது பணியாளர்களுக்கான மருத்துவ காப்புறுதி திட்டமொன்றினை அமுல்படுத்துவதற்காக எல்ஓஎல்சீ (LOLC) கம்பனிக்கு பேரவையினால் ரூபா 2,240,274 தொகை செலுத்தப்பட்டது. ஆனால் பேரவையின் ஊழியர்களிடமிருந்து எவ்விதமான பங்களிப்புக்களும் வசூலிக்கப்படவில்லை. திறைசேரியின் அனுமதியின்றி பேரவையினால் மொத்த செலவினம் ஏற்படுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. பேரவையின் நிதிகளிலிருந்து மருத்துவ கட்டணங்களினை மீளளிப்பு செய்வதற்கு ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் உயர்ந்தபட்சம் ரூபா 10,000 செலுத்தப்படும் என்ற அடிப்படையின் கீழ் இந்த மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கு மேலதிகமாக வித்தியாசமான மருத்துவ காப்புறுதி திட்டமொன்றும் காணப்பட்டது. இந்த காப்புறுதி திட்டமும் திறைசேரியினால் அங்கீகரிக்கப்படவில்லை. | உடன்படுகிறது. புதுப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள காப்புறுதி திட்டத்திற்கான ஊழியர்களின் பங்களிப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திறைசேரியின் அங்கீகாரத்தினை பெறுவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான அனுமதிகள் முறையாக பெறப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மருத்துவ பேரவையின் ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 68 ஆக இருந்த அதேவேளை உண்மையான பதவியணி 46 ஆக இருந்தது. அதன்படி, 23 பதவியணியின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்ட போதிலும் அத்தியவசியப் பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது தேவையற்ற பதவிகளை ஒடுக்குவதற்கோ எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இலங்கை மருத்துவ பேரவையினால் நிரப்பப்பட்ட பதவியணியின் அடிப்படையிலாகும். 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை ஈவை (EY) இனட அறிக்கையின் அடிப்படையிலாகும். 2023 ஒக்தோபர் மாதத்தில் டிஎம்எஸ் (DMS) இன் அங்கீகாரத்துடன் 63 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை மருத்துவ பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது. இடைக்காலத்தின் போது வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | அத்தியவசிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களினை நிரப்புவதற்கும் அத்தியவசியமற்ற பதவிகளை ஒடுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பேரவையின் நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் 07 முக்கிய பதவிகளுக்கான நியமனங்கள் ஒப்பந்த அடிப்படையில் அல்லது பகுதி நேர அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையான பதவிகளுக்கு நிரந்தரமாக உத்தியோகத்தர்களினை நிரப்புவதற்கு தவறினால் பேரவையினால் எடுக்கப்படும் தீர்மானத்தில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்று வெளிப்படுத்தியுள்ளது. | பேரவையின் தொடக்கத்தில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் முக்கிய பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. அவ்வகையான பதவிகளுக்கு அதற்கு உரித்தான சம்பளங்கள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக தகுதியுடைய நபர்களைக்கொண்டு நிரந்தர நியமங்களினை மேற்கொள்வது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும். சில | புதிய பணியாளர் மற்றும் நியமனத் திட்டம் என்பவற்றை அங்கீகரிக்கும் போது அதன்மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களில், பல்கலைக்கழகங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களில் ஏற்கனவே நிரந்தர பதவிகளில் உள்ள நபர்களைக்கொண்டு பகுதி நேர அடிப்படையில் முக்கிய பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. | |
| (இ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய 10 பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் கணக்காய்வு திகதியான 2024 மே 22 வரையிலும் நியமிக்கப்படவில்லை. மேலும், ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்படாத பூர்வாங்கல் நடைமுறை குழு ஒருங்கமைப்பாளரின் பதவிக்கு 2019 மே 31 தொடக்கம் ஒப்படை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு ரூபா 100,000 சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. | ஈவை (EY) இன் அறிக்கையின் அடிப்படையில் இலங்கை மருத்துவ பேரவையினால் அந்த புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டது. எனினும், எங்களின் கோரிக்கையினை தொடர்ந்து 2023 இன் பிற்பகுதியில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயம் பெறப்பட்டது. அரசாங்கத்தின் தொழில்முயற்சியொன்றாக இலங்கை மருத்துவ பேரவை வகைப்படுத்தப்பட்டதுடன் பின்னர் அரசாங்கத்தின் பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிகளினை பின்பற்றத் தொடங்கின. 2019 ஆம் ஆண்டில் பேரவையினால் ஒருங்கமைப்பாளரின் பதவி அங்கீகரிக்கப்படவில்லை என நாங்கள் உடன்படுகின்றோம். இருந்தபோதிலும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயத்தினை தொடர்ந்து 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பேரவையினால் அந்த பதவி அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் ஒப்படை அடிப்படையில் 03 மாத | முறையான நியமனத் திட்டத்தின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காலப்பகுதிக்காக ஒருங்கமைப்பாளருக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. முறையான நியமனத் திட்டத்தின் பிரகாரம் பேரவைக்கான எதிர்கால ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என்று 2023 ஆம் ஆண்டிற்கான பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்களினை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | இலங்கை மருத்துவ பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் நியமனத் திட்டம் என்பவற்றுடன் தொடர்புடைய சம்பள அளவுத்திட்டங்கள் மற்றும் கட்டமைப்புக்களினை தயாரிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பள கட்டமைப்பு என்னபவற்றறை முறைப்படுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பள கட்டமைப்பு என்னபவற்றறை முறைப்படுத்த வேண்டும். |
| (உ) | தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் செயலாளரின் NSCC/8/13/402/S ஆம் இலக்க கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுதாபனமொன்றாக இலங்கை மருத்துவ பேரவை கருதப்படும் பட்சத்தில் பொதுக் கூட்டுத்தாபனத்தின் சம்பளங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகளின் சுற்றறிக்கை பொருத்தமானதாக இருக்க வேண்டும் அதேவேளை இந்த சம்பள அளவுத்திட்டம் தற்போதைய ஊழியர்களுக்காக தனிப்பட்ட முறையில் வைத்திருப்பவர் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென்றும், பொது கூட்டுத்தாபனத்தின் சம்பள அளவுத்திட்டம் எதிர்காலத்தில் நியமிக்கப்படுகின்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருந்த போதிலும் 2024 மே வரையிலும் பேரவை அந்த அறிவுறுத்தல்களை பின்பற்றவில்லை. | பொது தொழில்முயற்சிகளின் சம்பள அளவுத்திட்டத்திற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்கின்ற செயற்பாட்டில் இலங்கை மருத்துவ பேரவை ஈடுபட்டுள்ளது. இந்த விடயம் உரிய நேரத்தில் தீர்க்கப்படும். | ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பள கட்டமைப்பு என்னபவற்றறை முறைப்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிகளின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும் மருத்துவ பேரவையினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/1-2019 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு காலாண்டிற்கு ஒரு அமர்வுப்படி ஒவ்வொரு ஆண்டிலும் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டுமாயினும் மீளாய்வாண்டில் பேரவையானது குறைந்தபட்சம் ஒரு கூட்டத்தையாவது நடத்தியிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |